## April 8, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மணிப்பூரின் விஷ்ணுபூர் மாவட்டத்தில் ஒரு வீட்டின் மீது தீவிரவாதிகள் குண்டு வீசி தாக்கியதில் 2 குழந்தைகள் உயிரிழந்தனர். அவர்களின் தாய் பலத்த காயமடைந்தார்.

(i) இந்தச் சம்பவத்துக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்கள், மத்திய ரிசர்வ் போலீஸ் படை (சிஆர்பிஎஃப்) முகாமுக்குள் புகுந்து, அங்கிருந்த பொருள்களைச் சூறையாடினர். அப்போது, பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இருவர் உயிரிழந்தனர். மேலும் 5 பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவங்களால் மாநிலத்தில் மீண்டும் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.

(ii) மணிப்பூரில் மைதேயி சமூகத்தினர் மற்றும் குகி பழங்குடியினர் இடையே கடந்த 2023-இல் ஏற்பட்ட கலவரத்தால் பெருமளவில் உயிரிழப்புகள் மற்றும் பொருள்சேதங்கள் நேரிட்டன. கடந்த ஆண்டுமுதல் மோதல்கள் குறைந்தபோதிலும், இரு குழுக்களின் தீவிரவாதிகள் அவ்வப்போது தாக்குதல் நடத்துவது தொடர்கதையாக உள்ளது.

(iii) மாநிலத்தில் இதுவரை நிகழ்ந்த வன்முறைகளில் 260-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் வீடிழந்து, நிவாரண முகாம்களில் தொடர்ந்து தங்கியுள்ளனர்.

(iv) மணிப்பூர் முதல்வராக இருந்த பாஜகவை சேர்ந்த பிரேன் சிங், கடந்த ஆண்டு பிப்ரவரியில் பதவி விலகியதைத் தொடர்ந்து, அங்கு குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது. கடந்த பிப்ரவரியில் குடியரசுத் தலைவர் ஆட்சி விலக்கப்பட்டு, பாஜகவின் யும்நாம் கெம்சந்த் சிங் புதிய முதல்வரானார்.

2. ஹோர்முஸ்நீரிணையை ஈரான் திறக்கக்கோரி ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை நிரந்தர உறுப்பினர்களான சீனா மற்றும் ரஷியா தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி முறியடித்தன.

(i) பஹ்ரைன் கொண்டுவந்த இந்த தீர்மானத்துக்கு 11 நாடுகள் ஆதரவளித்தன. சீனா மற்றும் ரஷியா எதிராக வாக்களித்தன. இரு நாடுகள் வாக்கெடுப்பைப் புறக்கணித்தன.

(ii) ஈரானுக்கு எதிராக பாரபட்சமான முறையில் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டதாகக் கூறி சீனாவும் ரஷியாவும் நிராகரித்தன. மேலும், ஈரானை முழுமையாக அழிக்கவுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், ஈரானுக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றுவது தவறான முன்னுதாரணமாக அமையும் என சீனா தெரிவித்தது.

3. மத்திய கிழக்கு போர் பதற்றத்தால் சர்வதேச சந்தையில் நிலவும் கச்சா எண்ணெய் தட்டுப்பாட்டின் எதிரொலியாக, சீனாவில் கடந்த 15 நாள்களில் 2-ஆவது முறையாக பெட்ரோல், டீசல் விலை டன்னுக்கு சுமார் 400 யுவான் உயர்த்தப்பட்டுள்ளது.

(i) எரிபொருள் தட்டுப்பாட்டைத் தவிர்க்க உற்பத்தி, விநியோகத்தைத் தடையின்றி மேற்கொள்ள எண்ணெய் நிறுவனங்களுக்கு சீன அரசு உத்தரவிட்டுள்ளது.

(ii) மறுபுறம், இலங்கையில் மக்களின் நிதிச்சுமையைக் குறைக்க டீசல் லிட்டருக்கு 100 ரூபாயும் (இலங்கை மதிப்பு), பெட்ரோல் லிட்டருக்கு 20 ரூபாயும் மானியமாக வழங்க அந்நாட்டு அரசு முடிவெடுத்துள்ளது. இச்சலுகையினால் அரசுக்கு மாதம் 2,000 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும்.

(iii) மத்திய கிழக்கு போர் தொடங்கியதிலிருந்து இலங்கையில் எரிபொருள் விலை மூன்று முறை (கடைசியாக 25 சதவீதம்) உயர்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

4. அரை நூற்றாண்டுக்குப் பிறகு நிலவை நோக்கிப் பயணித்த நாசாவின் 'ஆர்டெமிஸ்-2 விண்வெளி வீரர்கள் குழு, நிலவின் மறுபக்கத்தில் செவ்வாய்க்கிழமை அதிகாலை (இந்திய நேரப்படி) கடந்து சென்று ஆய்வில் ஈடுபட்டது.

(i) ஒரு பெண் உள்பட 4 விண்வெளி வீரர்கள் அடங்கிய இக்குழு, தற்போது பூமிக்குத் திரும்பும் பயணத்தில் உள்ளனர். முன்னதாக, நிலவின் மறுபக்கத்தை அடைவதற்காக மனித வரலாற்றிலேயே முன்னெப்போதும் இல்லாத வகையில் பூமியிலிருந்து சுமார் 2,52,756 மைல்கள் (4.06 லட்சம் கி.மீ.) தொலைவுக்கு விண்வெளியில் பயணித்து இக்குழு புதிய சாதனை படைத்தது.

(ii) இதற்கு முன்னதாக 1970-இல், 'அப்போலோ 13' விண்கலம் மேற்கொண்ட 3.99 லட்சம் கி.மீ. தொலைதூர பயணமே சாதனையாகக் கருதப்பட்டது. தற்போது அச்சாதனையை முறியடித்துள்ள இக்குழு, நிலவின் மேற்பரப்பிலிருந்து சுமார் 4,070 மைல்கள் தொலைவில் பறந்தது.

(iii) நிலவில் மோதிய விண்கற்கள்:

- நிலவின் மறுபக்கத்தைக் கடந்த சுமார் 6 மணி நேர ஆய்வின்போது, நிலவின் மேற்பரப்பில் விண்கற்கள் மோதுவதால் ஏற்படும் 'ஒளிப் பிழம்புகளை விண்வெளி வீரர்கள் நேரடியாகக் கண்டு வியந்தனர்.
- பூமியிலிருந்து என்றும் காண முடியாத நிலவின் அப்பகுதியை வீரர்கள் உன்னிப்பாகக் கவனித்தபோது, விண்கற்களின் மோதலால் நிலவின் தரைப்பகுதி அதிர்வதை அவர்கள் பதிவு செய்தனர்.

(iv) புதிய பெயர்கள் சூட்டல்:

- நிலவில் விண்கற்கள் மோதி ஏற்பட்ட, இதுவரை பெயரிடப்படாத பள்ளங்களுக்கு விண்வெளி வீரர்கள் தற்காலிக பெயர்களைச் சூட்டினர். திட்ட விண்கலத்தின் பெயரான 'இன்டெக்ரிட்டி' மற்றும் திட்ட கமாண்டர் ரீட் வைஸ்மேனின் மறைந்த மனைவி 'கரோல்' ஆகியோரின் பெயர்களை நிலவின் சில பள்ளங்களுக்குச் சூட்ட வேண்டுமென கனடா வீரர் ஜெரிமி ஹேன்சன் உருக்கத்துடன் கோரிக்கை விடுத்தார்.

(v) தொடர்பு துண்டிப்பும் மீட்சியும்:

- நிலவின் மறுபக்கத்தைக் கடக்கும்போது சுமார் 40 நிமிடங்கள் பூமிக்கும் விண்கலத்துக்கும் இடையிலான தகவல் தொடர்பு முற்றிலும் துண்டிக்கப்பட்டது. இது விண்வெளிப் பயணத்தின் மிகவும சவாலான பகுதியாகக் கருதப்பட்டது. மீண்டும் தொடர்பு கிடைத்ததும், வீரர்கள் உற்சாகத்துடன் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

(vi) அடுத்த இலக்கு நிலவில் தரையிறக்கம்:

- சீனா நிலவில் தடம்பதிக்கும் முன்பே, 2028-க்குள் மீண்டும் மனிதர்களை நிலவில் தரையிறக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.
- அதன் ஒரு பகுதியாகவே, இந்த ஆர்டெமிஸ்-2 பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது எதிர்காலத்தில் செவ்வாய் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்பும் நாசாவின்

திட்டத்துக்கும் ஒரு முன்னோட்டமாக அமையும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

5. தைவான் நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான கோமிங்டாங் கட்சியின் தலைவர் செங் லிவுன், 6 நாள் பயணமாக சீனா வந்தடைந்தார்.

(i) தைவானை தனது நாட்டின் ஒரு பகுதி என்று சீனா உரிமை கொண்டாடி வரும் நிலையில், அந்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் சீனாவுக்குப் பயணம் மேற்கொள்வது கடந்த 10 ஆண்டுகளில் இதுவே முதல்முறையாகும்.

(ii) குறிப்பாக, அடுத்த மாதம் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், சீன அதிபர் ஷி ஜின்பிங் ஆகியோருக்கு இடையே நடைபெறவுள்ள சந்திப்புக்கு முன்னதாக இவரின் பயணம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

(iii) சீன பயணத்துக்கு முன்னதாக தைவானில் செய்தியாளர்களிடம் பேசிய செங்லி வுன், 'சீன அதிபர்ஷி ஜின்பிங்கின் அழைப்பின் பேரில் இந்த அமைதிக்கான பயணம் தைவான் நீரிணை பகுதியில் நிலவிவரும் பதற்றத்தைத் தணிக்கவும், இரு நாடுகளுக்கு இடையே அமைதிப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்கவும் உதவும்' என்றார்.

(iv) அமெரிக்காவிடம் இருந்து நவீன ஆயுதங்களை வாங்குவதற்கும், உள்நாட்டுப் பாதுகாப்புத் துறையை மேம்படுத்துவதற்கும் தைவான் அரசு 4,000 கோடி டாலர் மதிப்பீட்டிலான சிறப்புப் பாதுகாப்பு நிதி பட்ஜெட்டை நிறைவேற்ற முயற்சித்து வருகிறது.

(v) இவ்வாறு அமெரிக்க ஆதரவு நிலைப்பாட்டில் உறுதியாவுள்ள தைவான் அதிபர் லாய் சிங் தேவை பிரிவினைவாதியாகக் கருதும் சீனா, அவருடன் பேச்சுவார்த்தை நடத்த மறுத்து வருகிறது.

(vi) ஆனால், பாதுகாப்புச் செலவினங்களைக் குறைக்க வேண்டும் என்று வலியுறுத்தி, லாய் சிங் தே அரசின் முயற்சிக்கு கோமிங்டாங் உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் நாடாளுமன்றத்தில் முட்டுக்கட்டை போட்டுள்ளன.

(vii) இத்தகைய சூழலில், செங் லி வுன்னின் இந்தச் சீன பயணம், ஷி ஜின்பிங்-டிரம்ப் சந்திப்பில் வர்த்தகம் சார்ந்த பேச்சுவார்த்தைகளில் கவனம் செலுத்த வழிவகுக்கும் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

6. ஸ்பெயினில் நடைபெறும் ஐஎஸ்எஸ்எஃப் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில், இந்தியாவின் பாலக் மற்றும் முகேஷ் நெலவள்ளி இணை தங்கப் பதக்கம் வென்று அசத்தியது.

(i) 10 மீட்டர் ஏர் பிஸ்டல் கலப்பு அணிகள் பிரிவில் களம் கண்ட இந்த ஜோடி, இறுதிச் சுற்றில் 487.7 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்து தங்கத்தை தட்டிச்சென்றது. இதில் பாலக் 243-புள்ளிகளும், முகேஷ 244.7 புள்ளிகளும் பெற்றனர். இது, சீனியர் மற்றும் ஜூனியர் என இரு பிரிவுகளிலுமே உலக சாதனை புள்ளிகளாக அமைந்தது.

7. சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குள் மாதவிடாய் பருவ பெண்கள் நுழைய விதிக்கப் பட்டிருக்கும் கட்டுப்பாடு என்பது முழுவதும் மத நம்பிக்கை என்ற எல்லைக்கு உட்பட்ட விவகாரமாகும். சமய தன்னாட்சி அதிகாரத்துக்குள் உட்பட்டது. எனவே, இது நீதிமன்ற மறு ஆய்வுக்கு அப்பாற்பட்ட விஷயம்' என மத்திய அரசுத் தரப்பில் உச்சநீதிமன்றத்தில் வாதிடப்பட்டது.

(i) சபரிமலை ஐயப்பன் கோயிலில் சிறுமிகள், மூதாட்டிகள் மட்டும் வழிபாடு செய்ய அனுமதிக்கப்பட்டு வருகிறது. மாதவிடாய் பருவ பெண்கள் வழிபாடு நடத்த அனுமதிக்கப்படுவதில்லை.

(ii) கடந்த2018-ஆம் ஆண்டில்இது தொடர்பான மனுவை விசாரித்த உச்சநீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் அரசியல் சாசன அமர்வு, 4:1 என்ற பெரும்பான்மையில் அனைத்து வயது பெண்களும் சபரிமலை கோயிலில் வழிபாடு நடத்த அனுமதித்து தீர்ப்பளித்தது.

(iii) அதன் பிறகு 2019, நவம்பர் 14- ஆம் தேதி அப்போதைய உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் தலைமையிலான 5 நீதிபதிகள் அரசியல் சாசன அமர்வு, சபரிமலை ஐயப்பன் கோயில், மசூதிகள் மற்றும் பார்சி மத வழிபாட்டுத் தலங்களில் பெண்களுக்கு அனுமதி மறுப்பு என வழிபாட்டுத் தலங்களில் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளைச் சுட்டிக்காட்டியது.

(iv) அப்போது ஒரு விவகாரத்தின் அடிப்படையில் மட்டுமே பல்வேறு மதங்களில் பெண்களின் சுதந்திரத்துக்கு எதிரான நடைமுறைகள் குறித்து முடிவுகளை மேற்கொள்ள முடியாது என 3:2 என்ற பெரும்பான்மையில் நீதிபதிகள் கூறினர். இதைத் தொடர்ந்து, மத வழிபாட்டுத் தலங்களில் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை 5 நீதிபதிகளுக்கும் மேற்பட்ட அரசியல் சாசன அமர்வு விசாரிக்க அவர்கள் பரிந்துரைத்தனர்.

(v) பெண்களைத் தீண்டத்தகாதவர்களாக நடத்த முடியாது: நீதிபதி நாகரத்னா

- வழக்கு விசாரணையின்போது, இந்த வழக்கில் கடந்த 2018-ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித் தபோது 'கோயிலுக்குள் மாதவிடாய் பருவ பெண்களை அனுமதிக்க மறுப்பது தீண்டாமை வடிவம். இது, தீண்டாமையை தண்டனைக்குரிய குற்றமாக குறிப்பிடும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 17-க்கு எதிரானது. பெண்களை கீழ்நிலையில் வைக்கும் ஆணாதிக்க மனப்பான்மை' என்று அப்போதைய தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தெரிவித்த கருத்தை விமர்சித்த துஷார் மேத்தா. 'மேற்கத்திய நாடுகள் புரிந்துகொள்ளும் விதத்தில், இந்தியா அந்த அளவுக்கு ஆணாதிக்க நாடாகவோ அல்லது பாலினப் பாகுபாடு நிறைந்த நாடாகவோ இல்லை' என்றார்.
- இதைக் கேட்ட நீதிபதி நாகரத்னா, 'சபரிமலை விவகாரத்தில் அரசமைப்புச் சட்டப் பிரிவு 17-ஐ ஒப்பீடு செய்ததை எவ்வாறு விமர்சிக்க முடியும்?. ஒரு பெண்ணாக இந்த விவகாரத்தைப் பார்க்கையில், ஒவ்வொரு மாதமும் 3 நாள்களுக்கு பெண்களைத் தீண்டத்தகாதவர்களாக நடத்த முடியாது' என்று குறிப்பிட்டார்.
- இதற்குப் பதிலளித்த துஷார் மேத்தா, 'சபரிமலை ஐயப்பன் கோயிலில் பெண்கள் நுழைவதற்கான கட்டுப்பாட்டுக்கும், மாதவிடாய்க்கும் சம்பந்தமில்லை. குறிப்பிட்ட வயது அடிப்படையிலான கட்டுப்பாடு மட்டுமே பெண்களுக்கு விதிக்கப்படுகிறது. இதில் எந்தக் குழப்பமும் இல்லை. நாடு முழுவதும் உள்ள ஐயப்பன் கோயில்களில் அனைத்து வயது பெண்களும் அனுமதிக்கப்படுகின்றனர், சபரிமலையில் உள்ள ஐயப்பன் கோயிலில் மட்டுமே இந்தக் கட்டுப்பாடு உள்ளது. இது தனித்துவமான வழக்கு' என்றார்.

8. இந்தியா-நியூஸிலாந்து இடையே வரும் 24-ஆம் தேதி தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையொப்பமாகும் என்று தெரியவந்துள்ளது.

(i) தில்லி பாரத மண்டபத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் இருதரப்பு தலைவர்கள் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட உள்ளனர். இதன்மூலம் நியூஸிலாந்துக்கு இந்திய உற்பத்திப் பொருள்களை எவ்வித வரியும் இன்றி ஏற்றுமதி செய்ய முடியும். அடுத்த 15 ஆண்டுகளில்

அந்நாட்டில் இருந்து இந்தியாவுக்கு 2 கோடி பில்லியன் டாலர் அளவுக்கு முதலீடும் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

(ii) தடையற்ற வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தை நிறைவடைந்து ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளதாக இரு நாடுகளும் கடந்த டிசம்பரில் அறிவித்தன.

(iii) இந்த ஒப்பந்தம் மூலம் இந்தியா தனது ஏற்றுமதிப் பொருள்களை வரி ஏதும் இல்லாமல் நியூஸிலாந்தில் விற்பனை செய்ய முடியும். அதேபோல நியூஸிலாந்தில் இருந்து கம்பளி, நிலக்கரி, மரம், ஒயின், அவகேடோ, புளூ பெர்ரி பழம் ஆகியவை இறக்குமதி செய்யப்படும். இவற்றுக்கு 95 சதவீதம் வரை வரி விலக்கு உண்டு.

(iv) அதே நேரத்தில் பால் மற்றும் பல்வேறு வகை பால் பொருள்கள், வெங்காயம், சர்க்கரை, நறுமணப் பொருள்கள், உணவுப் பயன்பாட்டு எண்ணெய், ரப்பர் ஆகியவற்றுக்கு வரிச் சலுகை கிடையாது. உள்நாட்டு விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கில் இந்தியா இந்தக் கட்டுப்பட்டை விதித்துள்ளது.

(v) இதுதவிர ஆண்டுதோறும் 5,000 இந்தியர்களுக்கு தற்காலிக வேலை வாய்ப்பு விசாவை நியூஸிலாந்து வழங்க இருக்கிறது. மருத்துவர்கள், பொறியாளர்கள், திறன்மிக்க பணியாளர்கள் இந்த விசா மூலம் அனுமதிக்கப்படுவர். 3 ஆண்டுகள் வரை அவர்கள் அந்நாட்டில் தங்கிப் பணியாற்ற முடியும். இந்தியாவில் இருந்து ஆயுஷ் மருத்துவ நிபுணர்கள், யோகா பயிற்சியாளர்கள், சமையல் கலைஞர்கள், இசை ஆசிரியர்கள் உள்ளிட்டோரும் இதில் பயனடைவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

9. நாட்டின் அணுமின் சக்தித் திட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாக 500 மெகாவாட் மின்னுற்பத்தி திறன் கொண்ட முன்மாதிரி வேக ஈனுலை, மின் உற்பத்திக்கான அணுப்பிளவு செயல்பாட்டில் முதல் நிலையை எட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மத்திய அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையத்தின் செய்திக்குறிப்பு வருமாறு:

(i) அணு சக்தித் துறையின் கீழ், சென்னை கல்பாக்கம் இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் மூலம் முன்மாதிரி வேக ஈனுலை வடிவமைக்கப்பட்டு, பாரதிய நபிக்யா வித்யுத் நிகம் (பாவினி) நிறுவனம் மூலம் கட்டமைக்கப்பட்டது.

(ii) இது நீண்டகால அணுமின் சக்தி உற்பத்திக்கான உத்திசார் நடவடிக்கை. வழக்கமான வெப்ப அணு உலைகளைப் போலின்றி, இத்தகைய ஈனுலை கட்டமைப்புகளில் யுரேனியம்-புளூட்டோனியம் கலப்பு ஆக்சைடு எரிபொருளைப் பயன்படுத்தப்படுகின்றன. இது, அணு உலையில் பயன்படுத்தப்படும் எரிபொருளைக் காட்டிலும் அதிக எரிபொருளை உற்பத்தி செய்ய உதவுகிறது. இந்த அணு உலை, இறுதியில் தோரியம்-232-ஐ பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த 500 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட முன்மாதிரி வேக ஈனுலை கடந்த ஏப். 6 -ஆம் தேதி இரவு 8:25 மணிக்கு முதலாவது அணுப்பிளவு செயல்பாட்டு நிலையை எட்டியது. இது அணுமின் உற்பத்தியின் முதல் நிலை. நீண்டகால எரிசக்திப் பாதுகாப்பை வழங்குவதிலும், உள்நாட்டு அணுமின் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்துவதிலும் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க செயல்முறை. அணு மின் சக்தி திட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

(iii) அணுசக்தி ஒழுங் குமுறை ஆணையம், அணுமின் உற்பத்தி ஆலை கட்டமைப்புகளின் பாதுகாப்பை முழுமையாக ஆய்வுசெய்தபிறகு, மத்திய அணுசக்தி துறைச் செயலர், அணுசக்தி ஆணையத்தின் தலைவர் அஜித் குமார் மொகந்தி, இந்திய அணுசக்தி ஆணையத்தின் இயக்குநர் ஸ்ரீகுமார், இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மைய இயக்குநர் ஜி.

பிள்ளை, பாவினி முதன்மை மேலாண் இயக்குநர் அல்லு ஆனந்த், பாவினி மற்றும் ஹோமி சேத்னா நிறுவனத்தின் முன்னாள் முதன்மை மேலாண் இயக்குநர் கே.வி.சுரேஷ் குமார் ஆகியோர் முன்னிலையில் இது செயல்படுத்தப்பட்டது.

(iv) மேம்பட்ட பாதுகாப்பு அமைப்புகள், உயர்-வெப்பநிலை திரவ சோடியம் குளிரூட்டித் தொழில் நுட்பம் மற்றும் அணுப் பொருள்களை மறுசுழற்சி செய்ய இந்த அணு உலை உதவுகிறது. தோரியத்தை உருமாற்றம் செய்து யுரேனியம்-233 ஆக மாற்றுவதற்கு இந்தஈனுலை உதவிகரமாக அமையும்.

(v) எரிசக்தி உற்பத்திக்கு அப்பால், வேக ஈனுலைத் திட்டம் அணு எரிபொருள் சுழற்சி தொழில்நுட்பங்கள், மேம்பட்ட பொருள்கள், உலை இயற்பியல் மற்றும் பெரிய அளவிலான பொறியியல் ஆகியவற்றில் உத்திசார் திறன்களை வலுப்படுத்துகிறது.

(vi) பெரும்பாலான உள்நாட்டுத் தொழில்நுட்பங்கள் மற்றும் அது சார்ந்த கூறுகளைப் பயன்படுத்தி அணு உலையின் வடிவமைப்பு, உருவாக்கத்தில் பங்களித்த கணிசமான எண்ணிக்கையிலான விஞ்ஞானிகள், பொறியாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் பல்வேறு தரப்பினரின் அர்ப் பணிப்பை இத்திட்டம் பிரதிபலிக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10. தீவிரமடைந்து வரும் மேற்கு ஆசியப் போர் மற்றும் உலகப் பொருளாதாரத்தில் அதன் பேரழிவுத் தாக்கம் குறித்த பகுப்பாய்வு :-

(i) புவிசார் அரசியல் சூழல் மற்றும் அச்சுறுத்தல்கள்

- அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், ஈரானுக்கு இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளார். அமெரிக்காவின் நிபந்தனைகளுக்கு (ஹோர்முஸ் ஜலசந்தியைத் திறப்பது உட்பட) அவர்கள் இணங்கவில்லை என்றால், ஈரான் "முற்றிலுமாக அழிக்கப்படும்" மற்றும் அதன் உள்கட்டமைப்பு "கற்காலத்திற்கு" தள்ளப்படும் என்று அவர் கூறியுள்ளார்.
- ஈரானிய ஜனாதிபதி பெஷெஷ்கியன், 1.4 கோடி (14 மில்லியன்) ஈரானியர்கள் அமெரிக்காவை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகப் பதிலளித்தார். மேலும், இந்த மோதலில் தாமாக முன்வந்து பங்கேற்கத் தயாராகுமாறு குடிமக்களை அவர் வலியுறுத்தினார்.
- அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் சம்பந்தப்பட்ட இந்தப் போர், உலகளாவிய வர்த்தகப் பாதைகளை, குறிப்பாக ஹோர்முஸ் ஜலசந்தியை முடக்கியுள்ளது. இதனால் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவிற்கு கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

(ii) நாடு வாரியான தாக்கங்கள் :-

- ஆஸ்திரேலியா: உரங்களின் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துள்ளதால் (அவற்றில் மூன்றில் ஒரு பங்கு ஹோர்முஸ் வழியாகச் செல்கிறது), விவசாயிகள் கோதுமை சாகுபடியை கணிசமாகக் குறைத்துள்ளனர்.
- தென் கொரியா: மேற்கு ஆசிய எரிசக்தியை பெருமளவில் சார்ந்துள்ள நிலையில், எரிபொருளைச் சேமிப்பதற்காக, குளிப்பதற்கு வெந்நீரைக் குறைவாகப் பயன்படுத்துமாறு அரசாங்கம் குடிமக்களை அதிகாரப்பூர்வமாகக் கேட்டுக்கொண்டுள்ளது.
- தாய்லாந்து: அரசாங்க அலுவலகங்களில் குளிரூட்டிகளின் தேவையைக் குறைப்பதற்காக, பிரதமரும் உயர் அதிகாரிகளும் பாரம்பரிய சூட் மற்றும் டைக்கு

பதிலாக டி-ஷர்ட் மற்றும் ஷார்ட்ஸ்களை அணியத் தொடங்கியுள்ளனர்.

- பிலிப்பைன்ஸ்: மின்சாரத்தைச் சேமிப்பதற்காக, அரசாங்க ஊழியர்கள் தற்போது மின்தூக்கிகளைப் (லிஃப்ட்) பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
- எகிப்து: கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் தற்போது வாரத்தில் ஐந்து நாட்கள் மட்டுமே செயல்பட வேண்டும் எனக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.
- இலங்கை: பெட்ரோல் மற்றும் டீசல் பயன்பாட்டைக் குறைப்பதற்காக, அரசாங்கம் ஒவ்வொரு புதன்கிழமையையும் பொது விடுமுறையாக அறிவித்துள்ளது.
- லாவோஸ்: எரிசக்தி பற்றாக்குறை காரணமாக, பள்ளிகள் தற்போது வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே செயல்படுகின்றன.
- வங்கதேசம்: சர்வதேச விமானப் போக்குவரத்து தடைபட்டுள்ளதால், ஆயத்த ஆடைகளின் பெரும் தேக்கம் விமான நிலையங்களில் (டாக்கா மற்றும் சிட்டகாங்) சிக்கியுள்ளது.
- பிரேசில்: ஒரு முக்கிய சர்க்கரை உற்பத்தியாளராக, எரிவாயு விலை உயர்வைச் சமாளிப்பதற்காக பிரேசில் தனது கவனத்தை உயிரி எரிபொருள் உற்பத்திக்கு மாற்றி வருகிறது.
- அமெரிக்கா: அதிக பணவீக்கம், உயரும் வட்டி விகிதங்கள் மற்றும் விண்ணை முட்டும் எரிவாயு விலைகளை எதிர்கொள்வதால், சொந்த வீடு வாங்குவது மேலும் மேலும் கடினமாகி வருகிறது.

(iii) உலகளாவிய மருத்துவ மற்றும் எரிசக்தி நெருக்கடி

- மருந்துப் பற்றாக்குறை: உயிர்காக்கும் மருந்துகளுக்கான (புற்றுநோய் சிகிச்சைகள் உட்பட) உலகளாவிய விநியோகச் சங்கிலிகள் உடைந்துள்ளன. துபாய் மற்றும் தோஹா போன்ற ஏற்றுமதி மையங்களில் மருந்துகளை அனுப்ப முடியாததாலும், குளிர்பதனக் கிடங்குகள் செயலிழந்து வருவதாலும் அவை அழுகி வருகின்றன.
- கச்சா எண்ணெய் விலை உயர்வு: மார்ச் மாதம் போர் தொடங்கியதிலிருந்து, "பிரெண்ட்" (Brent) ரக கச்சா எண்ணெய் விலைகள் 51% வரை உயர்ந்துள்ளன. 1990-ஆம் ஆண்டின் வளைகுடாப் போரின்போது விலைகள் 46% உயர்ந்திருந்த நிலையில், தற்போதைய இந்த விலை உயர்வு அதைவிடவும் தீவிரமானதாக உள்ளது.

(iv) இந்தியாவின் உத்திசார் நிலைப்பாடு

- எரிசக்தி இருப்புகள்: இந்தியா தற்போது சுமார் 50 நாட்களுக்குப் போதுமான கச்சா எண்ணெய் இருப்பைத் தன்வசம் வைத்துள்ளது.
- இராஜதந்திர ரீதியிலான சாதகம்: ஒரு "நட்பு நாடாக" இருப்பதால், எண்ணெய் மற்றும் எரிவாயுவை ஏற்றிச் செல்லும் இந்தியக் கப்பல்களை 'ஹோர்முஸ் நீரிணை' (Strait of Hormuz) வழியாகச் செல்ல ஈரான் தற்போது அனுமதிக்கிறது; இது இந்தியப் பொருளாதாரத்திற்கு ஒரு தற்காலிகப் பாதுகாப்பு அரணாக அமைகிறது.
- பொருளாதார ரீதியிலான பாதிப்பு: இத்தகைய நட்புரீதியான போக்குவரத்து வசதி இருந்தபோதிலும், கச்சா எண்ணெய் விலையில் ஏற்படும் ஒவ்வொரு ஒரு டாலர் உயர்வும் இந்தியாவின் நிதிப் பற்றாக்குறை, நாணய மதிப்பு மற்றும் பணவீக்க விகிதம் ஆகியவற்றை எதிர்மறையாகப் பாதிக்கிறது.

பல அண்டை நாடுகளைக் காட்டிலும், போரின் ஆரம்பகட்ட அதிர்ச்சிகளை இந்தியா சிறப்பாகவே சமாளித்து வந்திருந்தாலும், உலகப் பொருளாதாரம் தற்போது வீழ்ச்சியின் விளிம்பில் உள்ளது. தற்போதைய போர்ச் சூழலும் பொருளாதாரத் தடைகளும் தொடர்ந்து நீடிக்குமானால், உலக நாடுகள் ஒரு பெரும் நெருக்கடியைச் சந்திக்க நேரிடும் என்றும், அந்த நெருக்கடிக்கு உடனடியாகத் தீர்வு காண இயலாத நிலை ஏற்படலாம் என்றும் எச்சரிக்கப்படுகிறது

P.L. RAJ IAS & IPS ACADEMY
SINCE : 2006
MAKING YOU SERVE THE NATION